Regd. No. M. 1530

BALAVINODINI

OR

THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol. VI] MAY 1924 [No. 5

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

IV. Vol. (1922) V Vol. (1923) with beautiful half-tone Illustrations

Gold Gilt Callico bind, each Rs. 2 0 0

...ion Inland Rs. 1—8
Foreign Rs. 2—0

...equested to pay subscriptions to our age... ...de receipts.

28 OCT 1924

186466.

All Rights reserved by the Publishers.

Vol. VI. தொகுதி 6.	1924௵ மே௴	No. 5 பகுதி 5

CONTENTS—பொருளடக்கம்

	பக்கம்.
தெய்வவணக்கம்	129
ஹிதோபதேசம்	130
மரணத்தின் மர்மம்	131-136
வித்வசமர்த்து	137-138
பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரம் தொடர்ச்சி	139-145
மனத்தாற் செய்யப்படும் புண்யங்கள் ...	145
கடவுளைநம்பினோர் கைவிடப்படார்	146-147
ஸ்ரீராமாவதாரம் காட்சிப்படலம் தொடர்ச்சி	148-152
பிரகலாதவெண்பா	153
கடமை கடைப்பிடி அல்லது ஸுத்யும்ந மகாராஜன்	154-156
கெடுவான் கேடுநினைப்பான்	157-158
பழமொழிகள் (Bit)	158
திருக்குறள் 8-ஆம அதிகாரம் அன்புடைமை	159-160

சித்திரப் படங்கள்.

அடுத்த சஞ்சிகையில் போடப்படும்.

குறிப்பு.—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜெண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனால் ஒப்புக்கொள்ளப் பட மாட்டாது.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 6 | 1924௵ மே௴ | பகுதி 5

600 008
186466

தெய்வ வணக்கம்

வேல் விருத்தம்.

மகரமள றிடைபுரள உரககண பணமவுலி
　மதியுமிரவியு மலையவே
வளரெழிலி குடறுழல இமையவர்கள் துயரகல
　மகிழ்வுபெறு மறுசிறையவாம்
சிகரவரை மனைமறுகு தொறுநுளைய மகளிர்செழு
　செநெல்களொடு தரளமிடவே
செகசிரபகிரதி முதல் நதிகள்கதி பெறவுததி
　திடரடைய நுகரும்வடிவேல்
தகரமிரு கமதமென மணமருவு கடகலுழி
　தருகவுளு முறுவலெயிறும்
தழைசெவியு நுதல்விழியு முடையவொரு கடவுள்மகிழ்
　தருதுணைவன் அமரர்குயிலும்
குகரமலை யெயினர்குல மடமயிலு மெனவிருவர்
　குயமொடமர் புரியுமுருகன்
குமரனறு முகனெதிரும் விருதுநிசி சாரணிகள்
　குலையவிடு கொடியவேலே.

அருணகிரிநாதர் அருள் வாக்கு

ஹிதோப தேசம்.

1. இன் சொல்லை, சூரியப்ரகாசத்துக்குச் சமானமாக மேற்றிசைப்புலவர் கூறியிருக்கின்றனர். திருவள்ளுவர்.

" இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று "

என்று கூறினர்.

2. இன்சொல் பேசுகிறவனிடம் எல்லோரும் விருப்பங் கொள்வர். அவனுக்கு இடர் ஒன்றும் நேராது. அவனுக்குப் பகைவர் இருக்க மாட்டார்கள். பகைவர் உண்டாயினும் அவர்கள் சில பொழுதில் தாங்கள் அவனிடம் பகைகொண்டதை யெண்ணி வருந்துவர். ஏனெனில் அவனுடைய இன்சொல் அவர்களை அவனிடம் அன்பு காட்டும்படி தூண்டும். ஆதலின் என்றும் எந்த வேளையிலும் இன்சொல் வழங்க வேண்டும்.

3. பாவச் செய்கை செய்வது எளிது. புண்யச் செய்கை செய்வது அரிது — என்று புத்தர் கூறியிருக்கிறார். உலகத்தில் கெட்ட பழக்கம் ஒருவனுக்கு எளிதில் வந்துவிடுகிறது. நல்ல பழக்கம் வருவது கஷ்டமாயிருக்கிறது. ஆதலின் எதிலும் ஜாக்ரதையாயிருக்கவேண்டும்.

4. மாமனார், மாமியார், மைத்துனர், நாத்திமார் இவர்கள், இப்படிப்பட்ட பெண் நமக்கு வாய்த்ததே என்று மகிழும்படி நடந்துகொள்ளு மருமகளிருந்த துண்டா உலகத்தில் என்று ஒரு நவீனநாகரிகன் கேட்டான். அப்பொழுது அருகிலிருந்த ஒரு பெரியவர் ஸீதாதேவி என்று மறுமொழி பகர்ந்தார்.

மரணத்தின் மர்மம்

கௌதமி என்று ஒரு பிராமணக் கிழவியிருந்தாள். அவள் சகல தர்ம நியாயங்களுந் தெரிந்தவள்; பெரியோர்களிடத்திலே பழக்கமுடையவள். அவளுக்குக் கங்காதரன் என்று ஒருபிள்ளை யிருந்தான். ஒருநாள் கிழவி தன்பிள்ளையை அழைத்துக் கொண்டு ஜலந்திரட்ட ஆற்றுக்குப் போனாள். போகிற வழியில் கங்காதரனை ஒரு ஸர்ப்பம் தீண்டிவிட்டது. அவன் உடனே மயக்கமடைந்து இறந்தான். கிழவி அதனால் பெருந்துக்கமடைந்து வாய்விட்டு அலறி அழுதாள். அப்பொழுது அவ்வழியே போன அர்ஜுனகன் என்னும் ஒரு வேடன் அந்த ஸர்ப்பத்தைத் தன் கையிலிருந்த நரம்புச் சுருக்கினாலே பிடித்துக் கிழவியினிடம் கொண்டுவந்து, "இந்த ஸர்ப்பந்தான் உன்னுடைய பிள்ளையைக்கடித்தது. இதை இப்போதே கொல்லுகிறேன், நீ துக்கப்படாதே. இதைத் தீயிலேபோட்டு எரிக்கட்டுமா? கத்திகொண்டு துண்டு துண்டாகத் துணிக்கட்டுமா? குழந்தையைக் கொன்ற இந்தக்கொடியபாம்பு நீண்டகாலம் உயிரோடிருப்பது கூடாது" என்றான்.

கிழவி — அர்ஜுனகா, இந்த ஸர்ப்பத்தை விட்டுவிடு. இதைக்கொல்லவேண்டாம். இந்தஸர்ப்பங்கடித்து

இறக்கவேண்டுமென்கிற விதி என் மகனுக்கிருந்திருக்கிறது; ஆகையினாலே இதுகடித்தது. அதற்காக இதனை நாம்கொல்வதாகாது. விதியிருக்கும்போது மதியுள்ளவன் எவன் தன்னைப் பெரியவனாக நினைப்பான்—என்றாள்.

அர்ஜுனகன்—இவை எனக்குத்தெரியும். யோகத்திலிருக்கும் பெரியோர்கள் இந்த உலகத்தில் குணங்களையும் குற்றங்களையும் அறிகிறதில்லை. சாந்தியை விரும்புகிறவர்கள் நேர்ந்தகாலத்தையும் விட்டுவிடுவார்கள். காரியத்தைக் கவனிப்பவர் சமயம்நேர்ந்தபோது அந்தக்காரியத்தைச் செய்துமுடித்து, துயரத்தை விட்டுவிடுவார்கள். என்றும் துயரப்படுகிறவர்களுக்குப் பாக்யம் கெடுகிறது. ஆகையினால் நான் இந்தப்பாம்பைக் கொல்கிறேன். உன்துக்கத்தை விடு—என்றான்.

கிழவி — நம்போன்றவர்களுக்குத் துயரமே இல்லை. ஸாதுக்களுக்குத் தர்மமே உயிர் என்பதை நீயறியாயா? அறிவில்லாதவர்களே நாள்தோறும் துயரப்படுவார்கள். நான் அப்படிப்பட்டவள் அல்ல. இந்த ஸர்ப்பத்தைக் கொல்லுவதற்கு நானதிகாரியல்ல. பிராமணர்களுக்குக் கோபம் இருப்பது கூடாதன்றோ? கோபத்தினால் அவர்கள் பிறரைப் பீடிப்பது அவர்களுக்குத் தர்மமல்ல. ஆதலின் இந்த ஸர்ப்பத்தை விட்டுவிடு—என்றாள்.

வேடன் — அம்மணி, இதனைக் கொல்வதாலுண்டாம் புண்யமே எனக்குப் பெரியலாபம். தேவபூஜையினாலுண்டாகும் லாபத்தைவிட உடனே கிடைக்கும் லாபம் சிறந்ததாகும். இனிக்காலக்ரமத்தினாலே கிடைக்கக்கூடிய புண்யம் இந்தக் கொடியபாம்பைக் கொல்வதனாலே கிடைக்கும். ஆதலின் கொல்லுகிறேன்—என்றான்.

கிழவி — இந்தப்பாம்பைக் கொல்வதனல் நமக்குப் பயன் என்னகிடைக்கும்? ஒன்றும் கிடைக்காது. கையி லகப்பட்டபகைவனை விட்டுவிடாமல் கொல்வது வீரமல்ல —என்றாள்.

வேடன் — இந்தஸர்ப்பத்தைக் கொல்வது அநே கரைக் காப்பாற்றியதாகும். குற்றஞ்செய்தவனைத் தண் டிப்பதுதான் முறை—என்றான்.

கிழவி — இந்தப்பாம்பைக் கொன்றுவிடுவதனல் என் மகன் பிழைக்கப்போவதில்லை. அன்றி வேறு ஏதே னும் பயனிருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை. ஆதலால் இந்த ஸர்ப்பத்தை விட்டுவிடு—என்றாள்.

வேடன் — தேவேந்திரன் முன்னே விருத்திரா சுரனைக் கொன்று மேன்மைபெற்றானென்று சொல்லக் கேட்ட தில்லையா? அவ்வாறே நீயும் இந்த ஸர்ப்பத்தைக் கொன்று துக்கத்தைவிடு—என்றான்.

வேடன் இவ்வளவு தூரம் சொல்லியும் கிழவி அந்த ஸர்ப்பத்தைக் கொல்வதற்கு விரும்பவில்லை. அவள், "உயிர்க்கொலை கொடிது! மகாபாபமுடையது" என்று எண்ணி அவனுக்கு அநுமதி தரவில்லை. இப்பொழுது அந்த ஸர்ப்பம், மனிதனைப்போல் மெல்லப் பேசத் தொடங்கியது—

அர்ஜுனகா, இந்தப்பிள்ளையைக் கொன்றது என் குற்றமல்ல. நான் பராதீனமாயிருப்பவன். யமனுடைய கட்டளைப்படி நான் இந்தப்பிள்ளையைக் கொன்றேனே யல்லாமல் இவன் மேலேகொண்ட பகையினாலாவது உண

விலே விருப்பங்கொண்டாவது இந்தச் சிறுவனை நான் கொல்லவில்லை. வேடனே இதுசம்பந்தமாய் ஏதேனும் பாபமிருக்குமானால் அது அந்த யமனுடையது—என்றது.

வேடனும் கிழவியும் ஸர்ப்பம் இவ்வாறு பேசக் கேட்டதும் பெருவியப்படைந்தனர். வேடன், உடனே ஸர்ப்பத்தைப்பார்த்து, "நாகமே, நீ பிறனுடைய தூண்டுதலாலே இந்தத் தீங்குச் செய்தாயானாலும் இதற்கு நீயுந்தான் காரணமாகின்றாய்! ஆதலால் நீகுற்றவாளிதான்! குயவன் ஒருமண்பாண்டம் செய்கிறான். அதற்குத் தடியும், சக்கரமும் காரணமாகின்றனவன்றோ? அது போல் நீயும் இதற்குக் காரணமாகிறாய்! பாபம் செய்தவனை நான் எப்படி விடுவேன்?''—என்றான்.

ஸர்ப்பம்—வேடனே! குயவனுடைய தடியும் சக்கரமும் தாமே காரியஞ்செய்யச் சக்தியுடையவைகளா? அல்லவே. அதுபோலவே நானுமாகிறேன். ஆதலால் என்மேல் குற்றஞ்சுமத்துவது தவறு—என்றது.

வேடன் — எப்படிப்பார்த்தாலும் இந்தப்பிள்ளையினுடைய மரணத்திற்கு நீயுந்தான் காரணமாகிறாய்! ஆதலால் நான் உன்னைக்கொல்லாமல் விடமாட்டேன். என்றான்.

ஸர்ப்பம் — வேடனே என்னை ஏவியவன் இன்னானென்று உனக்கு நான் உண்மையைக் கூறினேன். நீ அதைக் கவனியாமல் அற்பப்பிராணியாகிய என்னைக் கொல்லத் துணிகிறாய்! கொஞ்சம் ஆலோசித்துப்பார்—என்றது.

வேடன் — குற்றஞ்செய்த நீ என்கையில் அகப்

பட்டுக்கொண்டிருக்கும்போதே நான் ஏன் வேருெருவனைத் தேடிக்கொண்டுபோகவேண்டும்? உன்னை இன்று நான் விடமாட்டேன். இதோகொல்லப்போகிறேன்—என்ருன்.

இப்படியிருக்கையில் யமன் அவர்களுக்குமுன்னே தோன்றி நின்று, "ஸர்ப்பமே, என்னைக் காலம் ஏவியது, நான் உன்னை ஏவினேன். இந்தப்பிள்ளை இறந்ததற்கு நீயும் காரணமில்லை. நானும் காரணமல்லேன். ஆகாயத்திலும் பூமியிலுமுள்ள ஸ்தாவரஜங்கமங்களெல்லாம் காலத்தினுலே நடத்தப்படுகின்றன. இந்த உலகமே காலத்திற்கு உட்பட்டது. யாவும் காலத்தினுலேயே ஆகின்றன. யாவும் காலத்தினுலேயே அழிகின்றன. ஸர்ப்பமே, காரணமிவ்வாறு இருக்கும்போது என்னைக்குற்றவாளியாக எண்ணுவது தகுமா?—என்ருன்.

ஸர்ப்பம் — யமதருமராஜாவே, நான் உன்னைக்குற்றவாளியென்ருவது, குற்றமற்றவனென்ருவது சொல்லவில்லை. நான் உன்னுடைய ஏவலினுலே இதைச்செய்தேன் என்பதைமாத்திரம் சொன்னேன். காலத்தின் மேலே குற்றமிருந்தாலுமிருக்கட்டும் இல்லாமலிருந்தாலுமிருக்கட்டும்—என்று கூறிவிட்டு வேடனைநோக்கி, "யமதருமராஜா சொன்னதைக் கேட்டாயா? நிரபராதியான என்னை நீ சுருக்கிட்டுக்கொல்வது தகாது" என்று தெரிவித்தது.

வேடன் — இப்போது நீங்களிருவரும் குற்றவாளிகளாகிறீர்கள். இப்போது நான் இந்த யமதருமராஜனையும் இகழ்கிறேன். இவன் துராத்மா? பெரியோர்களுக்குத் துன்பம் செய்கிருனல்லவா?—என்ருன்.

யமன் — வேடனே, நாங்களிருவரும் ஸ்வதந் தாமற்றவர்கள்; காலத்துக்குட்பட்டவர்கள். கட்டளைப் படி நடப்பவர்கள். நீயோசித்துப்பார்த்தால் எங்களிடம் குற்றம் நினைக்கமாட்டாய்—என்றான்.

இப்போது காலபுருஷன் இவர்களின் முன்தோன்றி நின்று,

வேடனே, நானும், இந்தயமனும், இந்தப்பாம்பும் இந்தச் சிறுவன் இறந்ததற்குக் காரணமல்ல. இவன் செய்த கர்மமே இவனுடைய மரணத்திற்குக் காரண மாம். நாங்களனைவரும் கர்மத்திற்குட் பட்டவர்கள். கர்மங்கள் எங்களை ஏற்கின்றன. ஆதலால் இச்சிறு வனுடைய மரணத்திற்கு இவனே காரணம்—என்று கூறினன்.

இதைக்கேட்டதும் கௌதமி வேடனைநோக்கி, இந்தச் சிறுவன் தான் செய்த கர்மத்தினாலே காலம் வந்தபோது மரணமடைந்திருக்கிறானென்று தெரிந்து கொண்டோம். என்னுடைய மகனிவ்வாறு மரணமடைய நானும் கர்மம் செய்திருக்கிறேன் என்பது நிச்சயம். ஆதலின் ஸர்ப்பத்தை விட்டுவிடு" என்றாள்.

அர்ஜுனகன், "ஆகா, மரணத்தின் மர்மம் இவ் வாறு இருக்கும்போது நாம் பிறர்மீது குற்றங்கூறியதும் அதற்காகத் தண்டிக்கமுயன்றதும் பெரியதவறு" என் றெண்ணி அந்த ஸர்ப்பத்தை விட்டுவிட்டு எல்லோ ரையும் வணங்கி விடைகொண்டு தன்வழியே சென்றான். கிழவியும் துயரம் நீங்கித்தன்வீட்டிற் கேகினாள். ஏனை யரும் தத்தம் இடம் சென்றனர்.

வித்வசமர்த்து

காளமேகப்புலவரை நோக்கி ஒருவர் "ஈ ஏற மலை குலுங்கியது—என்றொரு பாடல் பாடமுடியுமா?" என்று கேட்டபோது, அவர் "ஏன் மலைமட்டும்? இந்த அண்ட சராசரங்கள் யாவும் குலுங்கின வென்றும் பாடமுடியும். கேளுங்கள்" என்று சொல்லி,

"வாரணங்கள் எட்டும் மகமேரு வுங்கடலும்
தாரணியு மெல்லாஞ் சலித்தனவால்—நாரணனைப்
பண்வாய் இடைச்சி பருமத்தி னாலடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது"

என்று பாடினார்.

இதன்கருத்து :—கிருஷ்ணாவதாரத்தில் பகவான் ஆயர்பாடியில் யசோதை வீட்டில் வெண்ணெய் திருடி யுண்டபோது, இனியமொழிகளைக் கொண்ட வாயை யுடைய யசோதை அந்தப்பகவானைத் தன்கையிலுள்ள பெரிய மத்தினால் அடித்தாள். அந்த அடி பகவா னுடைய திருமேனியில் புண்ணுண்டு பண்ணிற்று. அந்தப் புண்ணில் ஈயொன்று மொய்க்க பகவான் தமது சரீரத்தை அசைத்தார். அதனால் அவருடைய திரு வயிற்றிலுள்ள சராசரங்கள்முற்றும் அசைந்தன—என்பதாம்.

வாரணங்கள்—யானைகள் ; சலித்தன—அசைந்தன; பண் வாய்—மதுரமான சொற்களைக் கொண்டவாய் ; பரு—பெரிய.

மற்ருெருசமயம் பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடையாக ஒருபாடல் பாடும் என்று வினவ, உடனே அப்புலவர்,

"ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும்—ஓடிமண்டை
பற்றில் பரபரென்னும் பாரிற்பிண் ணுக்குமுண்டாம்
உற்றிடும்பாம் பெள்ளெனவே யோது"—என்ருர்.

சிலேடை என்ருல் ஒரு சொல் இரண்டு பொருளைத் தருவது. இப்பாடலில் வரும் முக்கிய பதங்கள் பாம்புக்கும் எள்ளுக்கும் பொதுப்பட நிற்கின்றன.

பாம்பு:—படமெடுத்தாடிக் குடத்தில் சேரும்; ஆடும்போது இரைச்சலிடும்; பெட்டி முதலியவற்றிலிட்டு மூடித்திறந்தால் தலையை நீட்டி முகத்தைக் காட்டும்; (கடித்தால் உடனே அதன் விஷமானது) மண்டைக்கு ஏறினுல் அங்கு பரபரென்று தினவுண்டாகும்; பூமியில் அதற்குப் பிண்ணுக்கு (பிள் + நாக்கு= பிளவுபட்ட நாக்கு) உண்டு.

எள்:—செக்கிலாட்டப் பட்டு அதின் சாரமாகிய எண்ணெய், குடத்திற் சேரும்; செக்கிலாடும்போது இரைச்சலிடும்; (எண்ணெயைக் குடத்திலிட்டு மூடி நுரையடங்கியபின்) திறந்துபார்த்தால் பார்ப்பவருடைய முகச்சாயையைத் தனக்குள்ளே காட்டும்; எண்ணெய் தலையுச்சியில் வார்க்கப்படுமானுல் பரவியோடிப் பரபரென்று ஊரலெடுக்கும்; அதனிடத்துப் பிண்ணுக்குமுண்டு. இந்தக்காரணத்தால் பாம்பும் எள்ளும் ஒன்றெனலாம்.

பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரம்

(87-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு நிற்கையில் பிரமசாரியாக வந்த ஆசிரியர், திருவெண்காடரைப் பார்த்து, "இன்று நல்ல நாள்; ஆவணிமாதம், திங்கட்கிழமை, ஓணம், பதின்மூன்றுவது நாள், மஹா பிரதோஷகாலம்—இப்படிப் பட்ட நாள் வாய்ப்பதரிது. இதில் விதிப்படி மஹாந்நியாஸ பூர்வமாய் ஸ்ரீருத்ராபிஷேகம் செய்விப்பது நல்லது. இதை வேதம் சிறப்பித்துக் கூறுகிறது. சிவபூஜை செய்வதற்கு முன்னே சிவனடியார் பூஜை செய்வது சிலாக்கியமாம்.

"ஏறுடையா யிறைவா வெம்பிரானென்று
நீறிடுவா ரடியார் நிகழ்தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ணலிவரென்று
வேறணிவார்க்கு வினையில்லைதானே"

என்று திருமந்திரம் என்னும் தெய்வீக நூல் சொல்லுகிற தல்லவா? ஆதலின் இவற்றை முடித்து உன்னுடைய ஆன்மார்த்த பூஜையைச் செய்" என்று கட்டளை யிட்டார்.

திருவெண்காடர், உடனே தமது குருவின் கட்டளைப்படி, சிவனடியார் பூஜையையும் சுவேதாரண்யப் பெருமானுடைய பூஜையையும் முறைப்படி சிரத்தை

யோடு செய்து முடித்தார். அப்பால், ஆன்மார்த்தமாய் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கத்தை ஆராதிக்கத்தொடங்கி முதலில் தம் குருவை ஒருபீடத்திலே வீற்றிருக்கச் செய்து அருச்சித்து அவர்தம் கிருபைபெற்றார்; பிறகு பஞ்சாக்ஷரத்தியானஞ்செய்து, பஞ்சசுத்தி முடித்துக்கொண்டு முறைப்படி ஆன்மார்த்தலிங்க பூஜைசெய்தார். அப்போது சிவானுக்ரகத்தால், "திருவெண்காட, சகல கலைஞானமும் உன்பாலாகுக?" என்று ஓர் அசரீரி வாக்குண்டாயது. அது கேட்டு அங்கிருந்தார் அனைவரும் பெருவியப்படைந்து ஜகதீசனைத் துதித்தனர். திருவெண்காடரும் தம்மையாளுடைய பெருமானை நோக்கி—

அளவறு பேரருட் கடலே அம்மை அப்பா அனைத்துடையாய்
களவறு வானோரரசே காலனைமுற் காய்ந்தோனே
துளவநறுந் தாருடையான் தோன்றலைத்தோன் றுணுக்கி
வளமருவும் மலைமகளை மணந்தபிரான் வாழியவே.

இன்னரசே யெனவுலகு வழுத்து மெம்மானெனக்கு நிரு
பொன்னடி யல்லால்வேறு புகலிடமும் உண்டுகொலாம்
நன்னய மென்கரும்பிருக்க நவையிரும்பை மெல்வார்போற்
பின்னையொரு தெய்வத்தைப் பேசறியேன் பேயேனே.

என்று பாடி மனவுருக்கத்துடன் துதித்தார்.

பிறகு திருவெண்காடர் பெட்டகக் கோயிலினுள் சிவலிங்கத்தையும் பிள்ளையாரையும் எழுந்தருளச்செய்து தமது குருவிற்கும் போஜனம் செய்வித்துத் தாமும் தமது அன்னையுடனிருந்து அமுதுண்டார்.

அமுதுண்டபின் திருவெண்காடர் தமது அன்னையின் திருவடிபணிந்து, "தாயே, தேவரீர் கருணையினால்

செய்து முடிக்க வேண்டுவன வெல்லாம் செய்து முடித்தேன். ஆயினும் சிறுகுறை யொன்றிருக்கிறது. அதனைக் கேட்டருள்வீராக.

தாயே,

"படமாடக்கோயில் பகவற் கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்கதாமே—"

என்று திருமந்திரங் கூறுகிறபடியால், மகேசுவர பூஜை செய்விக்க விருப்பமுண்டாகிறது. அதற்கு வேண்டிய பொருள் சேகரித்தருளவேண்டும்" என்றார்.

அவ்வம்மையார், "நீ சொன்னது நல்லகாரியமே. இதுவரையில் நம்மிடமிருந்த பொருள்முழுவதும் செலவாய்விட்டது. இனிக் கடன்வாங்கினாலன்றி வேறுவழியில்லை. என்ன செய்யலாம்" என்றார். இதைக்கேட்டதும் திருவெண்காடர் கவலைகொண்டார். என்ன செய்வதென்று உணராமல் மனங்கலங்கி, "சீ! இல்லாமை மிகக்கெட்டது. இதைப்போல் தீமைதருவதெதுவுமில்லை. இதனாலன்றோ—

"இன்மையு ளின்னாத தியாதெனி னின்மையுன்
இன்மையே இன்னா தது"

என்று தமிழ் வேதங்கூறியது" என்றெண்ணி மனந்தேறும் வகையில்லாமல் வருந்தித்தம் குறையைச் சிவபெருமானிடம் விண்ணப்பித்துக்கொண்டு சிவபெருமானைத் தியானித்தவராயிருந்தார். அதுகண்ட அவர் அன்னையாரும் கவலைகொண்டு மனங்கலங்கினார்.

இப்படியிருக்கையில் அன்றிரவு சிவபெருமான் திரு

வெண்காடருடைய கனவிலே முன்போல் விருத்த வேதியராகத்தோன்றி, "திருவெண்காட, கவலைப்படாதே. நீ விரும்புகிறபடி பொருள் தந்தோம். அப்பொருள் உன் வீட்டிலிருக்கிறது. நீ அதனை அடியவர்களுக்கு வேண்டிய வரையிலே கொடுத்து, பயனையடை" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

திருவெண்காடர் உடனே விழித்தெழுந்து, தம் அன்னையார் விழித்தெழுகிற வரையில் சிவத்தியானஞ் செய்து கொண்டிருந்து அவர் எழுந்ததும், தாம் கண்ட கனவை அவரிடம் சொல்லிமகிழ்ந்தார். அன்னையார் கேட்டு ஆனந்தமடைந்து சிவபெருமானுடைய திருவருளை வாழ்த்தினர்.

அப்பால் பொழுதுவிடிந்ததும், காவிரிப்பூம் பட்டிணத்திலிருந்து சில காவலாளர் ஓடிவந்து திருவெண்காடரையும் அவருடைய அன்னையாரையும் வணங்கி, "பூட்டியிருக்கும் தமது வீட்டிற்குள் நேற்றுப்பாதிராத்திரியில் ஒருசோதி தோன்றியது. அதைக்கண்ட எங்கள் கண்கள் கூசின. அதனை இன்னதென்று எங்களால் அறியக்கூடவில்லை. இந்த அதிசயத்தைத் தெரிவிக்கவே நாங்கள் விரைந்தோடி வந்தோம்" என்றார்கள். இதைக் கேட்டதும் ஞானகலாம்பிகையார் தமது மைந்தர் கண்ட கனா உண்மையாய்ப் பலித்ததுபோலும் என்று எண்ணி உடனே மகனுடன் புறப்பட்டுக் காவிரிப்பூம் பட்டிணம் போனார்.

அங்கேபோய் இருவரும் தங்கள் வீட்டைத்திறந்து அதனுள் பிரவேசித்தனர். வீட்டில் எங்கே பார்த்தாலும் செல்வம் குவியல் குவியலாக இருக்கக்கண்டு பிரமிப்பும்

ஆநந்தமுமடைந்து வியப்புற்றனர். அந்த நிதி ஜகதீசன் கருணையோடு அருளிய நிதியாதலால் அதற்குத் தூபதீப நிவேதனஞ் செய்து வணங்கினார்கள்; சிவபெருமானுடைய திருவருளைப்புகழ்ந்து அவரைத்துதித்தார்கள்.

அப்பால் திருவெண்காடர் தமது அன்னையாரின் அநுமதிபெற்று அவ்வப்போது தமக்கு வேண்டிய பொருள் எடுத்துக்கொண்டு திருவெண்காடுபோய் அடியார்களுக்கு மகேசுவர பூஜை செய்வித்து, அவரவர்களுக்கு வேண்டிய பொருள்களை வெறுப்புறக்கொடுத்து மகிழ்ந்தார். அதன்பின் அவர் தம்முடைய குருவினிடம் போய் அவரை வணங்கி, "ஸ்வாமி, தமது திருவருளால் அடியேன் யாவையும் நிறைவேற்றியவனானேன். நானும் என்குலமும் என்முன்னோரும் உய்ந்தோம். இனி எனக்கு ஒரு குறைவுமில்லை. என்கவலை தீர்ந்தது. இனி அடியேன் செய்யவேண்டியதைக் கட்டளை யிட்டருளல்வேண்டும்" என்று கூறிவேண்டினார்.

குரு, 'ஐயா, உனக்குப்புதிதாக உணர்த்தவேண்டுமென்பதில்லை; எல்லாவற்றையும் நீயேயுணர்ந்து செய்ய வல்லமை உனக்குண்டு. ஆயினும் நம்மை வினவியபடியால் ஒன்று சொல்வேன்.

"அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"

என்று தமிழ் வேதங்கூறுவதால், நீ சாதுசங்கம் ஒன்றை மாத்திரம் உறுதியாகக் கடைப்பிடித்து, அவர்களிடத்தில் அன்பு செலுத்திவரவேண்டும். இதற்குமேல் உனக்கு நான் அறிவிக்கத்தக்க தொன்றுமில்லை" என்று கூறினார்.

இதைக்கேட்டதும் திருவெண்காடர், தம் குருவினுடைய திருவடிபணிந்து "அவ்வாறே நடப்பேன்" என்று கூறி அன்றுமுதல் சாது சங்கப்பிரியராயிருந்து வந்தார். உண்மையான அன்பும் பக்தியும் அவரிடம் நாடோறும் வளர்பிறையின் கலைபோல வளர்ந்து, ஓங்கின. அவர் குருபூஜையும் சிவபூஜையும் அடியார் பூஜையும் தவறாமல் செய்துவந்தார்.

திருவெண்காடர் பின் சில நாட்களில் சகலகலாஞானத்திலும் மேன்மையடைந்து பிறர் தம்மை இத்தன்மையரென்று தெரியா வண்ணம் நடந்துவந்தார். இக்காலத்தில் இவருடைய குரு இவரிடமிருந்து புறப்பட்டுத் தம் இச்சைவழியே சென்றார். இச்சமயத்தில் திருவெண்காடருக்குத் திருமணஞ்செய்விக்கத்தக்க பருவம் வந்தது. அவர் அன்னையார், அதுகண்டு அவர்க்கு மணஞ் செய்விக்க விரும்பித் தமது மரபுக்கும் ஒழுக்கத்துக்கும் அந்தஸ்துக்கும் ஏற்ற கன்னிகையைத்தேடி யடைய முயற்சி செய்தார்.

அப்படி யிருக்கையில் அந்தக்காவிரிப்பூம் பட்டினத்திலேயே சிவ சிதம்பர செட்டியார் என்னும் ஒரு வைசியருக்கு ஒரு பெண் இருப்பதாகத் தெரியவந்தது. சிவ சிதம்பரஞ்செட்டியார், குலாசாரந் தவறாதவர்; சிறந்த புத்திமான்; பரிசுத்தர்; திரண்ட செல்வம்படைத்தவர்; இவருடைய மனைவி மகாலக்ஷ்மியோ என்று சொல்லத் தக்க அழகுடையவள்; சிவகாமியம்மை யென்னும் திருநாமமுடையவள். இருவரும் சிவநேசமுடைய உத்தம பக்தர்கள். இவர்களுக்குப் பிறந்த கன்னிகை சிவகலை யென்னும் அழகிய பெயருடையவள்; உலகத்திலுள்ள அழகும் தவமும் திரண்டொரு வடிவெடுத்ததோ வெனச்சொல்லத்தக்க சௌந்தரியம் வாய்ந்த திருமேனி யுடையவள்; அறிவு, அடக்கம், ஆசாரம், அன்பு, தவம், பொறுமை, தயவு, ஈகைமுதலிய சிறந்த குணங்கள்வாய்ந்தவள். இவ்வணங்கு பேதைப் பருவந் தாண்டி பெதும்பைப் பருவமடைந்திருந்தாள். இந்தப்

பருவமே விவாகஞ் செய்வதற்குரிய பருவமாதலால் அந்தப் பெண்ணரசியின் தாய்தந்தையர் அவளுக்குத்தக்க நாயகனைத் தேடிக்கொண்டிருந்தனர். அவர்கள் நமது திருவெண்காடரின் பெருமையுணர்ந்து அவரையே தங்கள் பெண்ணாகிய சிவகலை யென்பவளுக்கு நாயகராக நிச்சயித்தனர்.

இதனையறிந்த திருவெண்காடரின் அன்னையார் தம்முடைய மரபிலே தக்கமுதியோராகிய ஒருவரைச் சிவசிதம்பரஞ் செட்டியாரிடம் பெண்பேசிவரும்படி யனுப்பினார். செட்டியார் பெண்கொடுக்க இணங்கினர். பின் ஒரு ஜோதிடரைக்கொண்டு நல்லமுகூர்த்த நாள் நிச்சயிக்கப்பட்டது. அப்பால் அந்த முகூர்த்தத்தில் திருவெண்காடருக்கும் சிவகலையம்மையாருக்கும் குலாசாரந் தவறாமலும் சாஸ்திரோக்தமாகவும் விவாகம் நடந்தது. (வரும்.)

மனத்தாற் செய்யப்படும் புண்யங்கள்.

பாருலகிலுள்ள பல உயிர்கண்மேல் அநுதினம்
பட்சம்வைத்தே யிருத்தல்
பண்பினொடு தேவாலயங்களிற் சென்றுவழி
பாடுசெய நேசம்வைத்தல்
சாருநல்லோரை எதிர்கண்டு கொண்டாடி உள்
தழைதல் ஐம்பொறி யடக்கல்
ஸத்தியம் நிறுத்தல் தருமத்தினை நினைத்தல் உயர்
தத்துவத்தினை மதித்தல்
சீருறையு முத்திதரும் சிவமந்திரத்தைத்
தியானித்தல் பிழைபொறுத்தல்
செப்பிவை மனத்தால் செயப்படும் புண்ணியச்
செய்கையென மொழிவர்கண்டாய்,
மேருகிரி வில்லனே பெரிய நாயகிமகிழ்
விடங்கனே வேங்கடப்பன்
விந்தைபெறு சிந்தையினு வந்தருள் வாணிபுரி
விஞ்சையவிரிஞ்சேசனே.

(விரிஞ்சேசர் சதகம்,)

18646

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"

தெய்வபக்தியுடைய ஒருவன் எப்படியும் காரிய சித்தி பெறுவான். "நான் கடவுளை நம்புகிறேன். அவர் எப்படியும் சீக்கிரத்தில் எனக்கு அனுக்கிரஹம் செய்வார்" என்றெண்ணவேண்டுமே தவிர "சீ! நாம் இவ்வளவுநாள் கடவுளைப் பிரார்த்தித்தும் நமக்கு அவர் அருள் புரியாமலிருக்கிறாரே! அவர் என்ன கடவுள்! அவருக்குத் கண்ணிருக்கிறதா?" என்று இகழ்ந்தோமானால், அவர்நமக்கு ஒருபொழுதும் அனுக்கிரஹம் செய்யார். இதை விளக்க ஒரு கதையுண்டு:—

முன் ஒருகால் காசிமாநகரில் ஒரு வைசியனிருந்தான். அவன் தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்து தெய்வ பூஜைசெய்வான்; பிறகு காசிமாநகரில் தெருத்தெருவாகப்போய் பஜனைசெய்வான்; காலத்தை வீண் போக்காமல் 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்றெண்ணியவனாய், எப்பொழுதும் கடவுளின் திருநாமங்களை உச்சரித்துக் கொண்டேயிருப்பான்.

இப்படியிருக்கையில் ஒருநாள் அவன் ஒரு தெருவின் வழியாய்ப் பஜனை செய்துகொண்டுபோகுங்கால், கையில் வீணையுடன், ஸ்ரீநாரதமுனிவர் வரக்கண்டான். உடனே அவன் அவர் பாதத்தில் விழுந்து பணிந்தெழுந்து கைகூப்பி "ஸ்வாமி! தேவரீர் இப்பொழுது எங்கு செல்கிறீர்" என்று கேட்டான். நாரதமுனிவர் "நான் பகவானைத் தரிசிக்க வைகுண்டம் செல்கிறேன்" என்றுரைத்தார். அதைக்கேட்ட பக்தன் "ஸ்வாமீ! தேவரீர் திரும்பி வரும்பொழுது கடவுள் எனக்கு எப்பொழுது மோக்ஷமளிக்கப்போகிறார் என்று கேட்டு வாரும்" என்று சொல்ல அதற்குச் சம்மதித்து நாரதர் தம்வழியே சென்றார்.

இப்படி நாரதர் போய்க்கொண்டிருக்கையில் வழி

யில் தவம் செய்து கொண்டிருந்த ஒரு மகரிஷி அவரைக் கண்டு வணங்கித் துதித்து அவருடைய க்ஷேமசமாசாரங்களை விசாரித்தார்; நாரதர் வைகுண்டம் போவதாக அறிந்து அவரை நோக்கி" "ஸ்வாமி நீர் திரும்பி வரும்பொழுது எனக்கு எப்பொழுது பகவான் மோக்ஷமளிப்பார் எனக்கேட்டு வாரும்" என்று சொல்லி அவரை வழிவிட்டு அனுப்பினர்.

கொஞ்சநாள் கழிந்ததும் நாரத மஹாமுனிவர் வைகுண்டத்திலிருந்து பூலோகத்திற்கு வந்தார். வந்ததும் முன் தாம்கண்ட அம்மஹரிஷியைக் கண்டு "உமக்கு இன்னும் நான்கு ஜன்மம் முடிந்ததும் ஐந்தாவது ஜன்மத்தில் கடவுள் மோக்ஷமளிப்பார்" என்று சொல்லிச் சென்றார். இதைக்கேட்ட அம்முனிவர் "ஐயோ நான் இவ்வளவு காலம் தவம்புரிந்தேனே. இது போதாதா? நான்கு ஜன்மங்கள் கழிக்கவேண்டுமா?" என்று சொல்லி, மனங்கலங்கிக் கடவுளை இகழ்ந்தார்.

நாரதமுனிவர் பிறகு தெய்வ பக்தனிடம் சென்று "நீ மோக்ஷமடைவதற்கு இந்தப் புளியமரத்தில் எத்தனை இலைகளிருக்கின்றனவோ அத்தனை ஜன்மங்கள் எடுக்கவேண்டும்" என்று சொல்லி அங்கிருந்த ஒருபுளிய மரத்தைக் காட்டி மறைந்தார். உடனே பக்தன் "இவ்வளவு ஜன்மங்கள் எடுத்தாவது கடவுள் எனக்கு மோக்ஷம் சமம் அளிக்கிறாரே" என எண்ணி ஆநந்தக்கூத்தாடினன்.

பிறகு கொஞ்சநாட்களுக்குள் பகவான் அந்தப்பக்தனைத் தம் பாதாரவிந்தத்தில் சேர்த்துக் கொண்டார். பக்தன் கடவுளைநம்பினன்; உடனே மோக்ஷம் கிடைத்தது. ரிஷி அநேகநாள் தவம் செய்தும அவர்க்குத் தெய்வ நம்பிக்கை குறைந்திருந்தமையினுல் சீக்கிரம் முக்திகிடைக்கவில்லை. கடவுளிடத்தில் உண்மைப்பக்தியும் நம்பிக்கையும் வைப்பதே அறிவுடைமையாகும். கடவுளைநம்பினோர் கைவிடப்படார்"

A. PARTHASARATHY.

37, Venkatachela Chetty st., *TRIPLICANE.*

ஸ்ரீ ராமாவதாரம்

(118-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்சிப் படலம்.

ஓங்கி நீண்டு செழித்துத் தழைத்து அதி ரமணீயமாக வளர்ந்துள்ள அசோக வனத்தில் மிகவும் அழகுவாய்ந்த ஒரு மாத்தினடியில் சோகமே ஓர் உருப் பெற்றதுபோல் வீற்றிருந்த பிராட்டியை அஞ்சனைச்செல்வர் கண்ணுற்றார். அரக்க மாதரனேகர் அவ்வம்மணியைச் சூழ்ந்து பயமுறுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் திரிசடை யென்னும் பெண்கள் நாயகமான ஓரழகிய ஸ்திரீ, பிராட்டிக்குத் தைரியஞ் சொல்லிக்கொண்டிருந்தாள். இந்த உத்தமியே குணபூஷணரான விபீஷணரின் அருமைப் புத்திரி

இப்போது ஆஞ்சநேயர் மறைந்தபடியே பிராட்டியின் திருவுருவத்தைக் கவனித்திருந்தார்; "அந்தோ! இத்தேவியார் கல்லின் மத்தியிற்றோன்றிய சஞ்சீவியானது எப்படி வாடிவதங்கியிருக்குமோ அப்படியன்றோ வாட்டமுற்றிருக்கின்றனர். இந்நாயகியின் இடைபோலவே ஸர்வாங்கமும் சிறுத்திருக்கின்றன. கண்கள் இமைக்கவுங்காணோம். முகிழ்க்கவுங்காணோம். பகற்காலத்தேத்திய தீபத்தைப்போலவே தேகம் ஒளியிழந்

திருக்கின்றது. புலிக்கூட்டத்தினிடையே சிக்குண்ட மானைப்போல் விளங்குகின்றனர். இதோ நமது பெருமானாகிய ஸ்ரீராமபிரானது திருநாமத்தை உச்சரித்தபடியே அப்பெருமானை நினைந்து நினைந்து விழுதலும், விம்முதலும், பெருமூச் செறிதலும், நடுங்குதலும், எழுந்திருத்தலும், ஏங்குதலும், தொழுதலும், சோருதலும், இரங்குதலுமாக இருக்கின்றனரே யன்றி வேறெச்செயலிலும் மனஞ்செலுத்தினவராகத் தோன்றவில்லை. பெண்களுடைய கண்களை 'மழைக்கண்' (அதாவது குளிர்ச்சியும், கருமையும் தோற்றப் பொலிவுகொண்டிருத்தல்) என்று அறிஞர் சாதாரணமாகப் புகழ்வதுண்டு. அம்மொழி இந்தத் தேவியாரிடம் காரணக்குறி என்று சொல்லும்படி கண்கள் நீர்ப்பெருக்கை வீழ்த்துகின்றனவே. நீலமணிபோலுங் கருநிறங்கொண்ட பொருள்களைக்காணின் இவர் பெரிதும் அழுகின்றனர். பேரன்புடையோர் ஒருவரை யொருவர் பிரிய நேர்ந்தால் அப்போது அவர்களுடைய நிலைமை எப்படியிருக்குமோ அப்படி யன்றோ இவ்வம்மணியின் செய்கை காணப்படுகின்றது. 'நமது நாயகன் எவ்விதத்தும் நம்மை மீட்க வருவார்' என்கிற எண்ணத்துடன் திசைகளைநோக்குகின்றனர். இத்தன்மையான செயல்களை நாம் நோக்கும்போது இவரே நாம் நாடிவந்த தேவியாராயிருத்தல் வேண்டும்" என்று தமக்குள் தீர்மானித்தவராய் வாயுபுத்திரர் பின்னும் கவனிக்கலானார்.

பிராட்டியார் இச்சமயத்தில் பின்வருமாறு தாமே பேசிக்கொண்டனர்:—"ஆ! தெய்வமே! நம்மைப்பிரிந்து சென்ற இளையவர் தமது அண்ணனாகிய நமது நாயக

ரைக்காணவில்லையோ? அல்லது கண்டபின் அவ்விருவரும், இப்பரந்த உலகின் கண் இலங்கைத் தீவு ஒன்றுண்டென்பதையறிந்து கொள்ளவில்லையோ? என்ன செய்வேன்! புண்ணிற்கோலிட்டதுபோலென் உள்ளம்வருந்துகின்றதே. நம்மை இராவணன் கவர்ந்து வந்தபோது அவனைத் தடுத்து நமக்காக அவனுடன் போர்புரிந்த அந்தப் பக்ஷி ராஜனாகிய ஜடாயு இறந்தொழிந்தனன் போலும். இறவா திருப்பின் அச்சேதியை நமது நாயகனுக்கு அறிவித்திருக்க மாட்டானா? ஒருவேளை நான் இளையவரைக் கோபித்துக் கொண்டதுபற்றி "சீ! இவள் கெட்டாள் போ" என்றென்னை வெறுத்துப் போயினரோ? ஒன்றும் தோன்றவில்லையே! கொண்டு போனவன் அரக்கனாதலின் நமது தேவியை அரக்கர் இன்னும் உயிருடன் வைத்திரார். அதுவிஷயமாக நாம் முயற்சி எடுத்துக் கொள்வது வீண் என்று எண்ணித்திரும்பி விட்டனரோ? அல்லது பெற்றதாய்மாரும் மற்றுமுள்ள சுற்றத்தாரும் அவர்களைத் தேடிவந்து அயோத்திக்கே அழைத்துக் கொண்டு போயினரோ? எதையுந் துணியக் கூடவில்லையே! நெஞ்சம் பதைக்கின்றதே.

மிக்கபலசாலியான கரன் என்பவன் நமது நாயகரை எதிர்த்து மாண்டது நமக்குத் தெரியும். அவனைப் போன்று அவனிலும் வல்லமை வாய்ந்த அரக்கர் எவரேனும் வழிமறித்து நம்மன்பர்க்கு ஏதேனும் இடையூறு விளைவித்திருப்பரோ? ஆ! ஆ!! நாம் எதைத் தான் நிச்சயிக்கக்கூடும். "அப்பா! இந்த அயோத்தியை என்மகன் பரதன்தான் ஆளவேண்டும். நீகாட்டுக்குப் போகவேண்டும் என்று எனது சிறிய மாமியாரான

கைகேசியார் சொன்னபோது "அம்மா! அப்படியே யாகட்டும். அவன் என்தம்பியல்லவா? என்று விடை பகர்ந்த காலத்தில் கண்ட எனது நாயகரின் திருமுகப் பொலிவை மீண்டும் நான் எப்போது காணப்போகிறேன். கங்கைதங்குஞ் சடாபாரத்தைக் கொண்ட சாக்ஷாத் சிவ பிரானுடைய திருவில்லை அநாயாசமாக வளைத் தொடித்த அத்திருப்புயத்தைத்தான் காணப் போகிறேனே? கங்கையைக் கடக்கப் படகு விடுத்த ஓரேழை வேடனைப் பார்த்து "அன்ப! நீ என் தோழன்; இவ்விளையவன் உன் தம்பி; இந்தஸீதை யுன்கொழுந்தி" என்று வாய் கூசாமல் உரைத்த அந்த ஒப்பற்றநேயத்தை நான் எவரிடம் அறியப் போகிறேன்? இன்னும் இவைபோன்ற அற்புதச் செயல்களை உள்ளபடி நடத்திக்காட்டிய என் உயிர்த்துணையை எப்போது சந்திப்பேன்? தமக்குரிய ஐசுவரியங்களை விட்டுவிட்டு வனம் புகுந்தசமயத்தில், பிராமணர்கள் கூட்டமாகவந்து "மகாப்பிரபு, எங்களுக் கொன்று மில்லையா?" என்று கையேந்தியபோது "ஐயன்மீர்! நீங்கள் சிறிது முன்வாராமற் போனீர்கள். ஆயினும் பாதகமில்லை. இதோ இவ்வனத்தில் கணக் கற்று மேயும் பசுக்குலங்களவ்வளவையும் நீங்கள் ஓட்டிக் கொண்டு போங்கள்" என்று சொன்னபோது அவர்கள் "இன்னும் வேறு காணிக்கை ஒன்றுமில்லையா?" என்று கேட்க, அவ்வேதியர்களின் ஆசைப் பெருக்கைக்கண்டு சிரித்த என்நாயகரின் அச்சிரிப்பை இனியுங் காணும் பாக்கியமடையப் போகிறேனே?" என்றிவ்வாறு வாய் விட்டுரைத்ததை அஞ்சனைச் செல்வர் செவிகொடுத்துக் கேட்டார்; கேட்டுப் பின்னுங் கவனிக்கலுற்றார்.

அப்போது பிராட்டியார் தம் அருகிருந்த திரிசடையைப்பார்த்து "அம்மா திரிசடையே! இருந்தாற்போலிருந்து எனது இடப்பக்கத்துப் புருவமுந்தோளுங் கண்களுநுடிக்கின்றன. முன்னர் நாங்கள் வனம் புகுந்தபோது வலப்பக்கத்துப் புருவமுதலியவை துடித்தன. அதன்பலன் எனக்குத் தீங்காகவே முடிந்தது. இப்போது இடந்துடிக்கின்றதே! இதன் பலன் யாதாமோ?" என்று கேட்டனர்.

திரிசடை "அம்மா! நீயுனது நாயகனைச் சீக்கிரத்திற் சந்திப்பாய். சுகமுண்டாகும். உனக்குத் தீங்கிழைத்தோர் நாசமடைவார்கள். இதற்கறிகுறியாக வண்டும் காதினிடம் இனிய ஓசையை ஊதிப்போயிற்று.

எனக்கு நெடுநாள் தூக்கமில்லாததால் நான் கனவு காணக்கூடவில்லை. இப்போதுதான் சிறிது தூங்கினேன்; ஒரு கனவு கண்டேன். அதன் அதிசயத்தைக்கேள்.

(வரும்.)

பிழை திருத்தம்.

72-ம் பக்கத்தின் ஈற்றில்

" அறிவு அற்றங்காக்கும் அறியாமை
ஆரிரு ளுய்த்துவிடும் "—குறள்.

என்றிருப்பதை—

" அறிவு அற்றங்காக்குங் கருவி "
" அடங்காமை, ஆரிருளுய்த்துவிடும் "—குறள்வாக்கியங்கள்

எனத் திருத்திவாசிக்கவும்.

பிரகலாத வெண்பா

(73-ம் பக்கத் தொடர்ச்சி.)

(இரணீயன் வினா.)

எனக்கெதிரி யாக இயைந்தபய லேநீ
மனக்குவந்த வாறு வழுத்தி—யுனக்கும்
பரந்தவுல கிற்கும் பரிந்தருளம் மாயன்
கரந்தவிடங் காட்டென்றான் காய்ந்து (26)

(பிரகலாதன் விடை)

சாணினுமோர் தன்மை யணுவச் சதஞ்செய்த
கோணினுமா மேருவெனுங் குன்றினுமித்—தூணினுநுஞ்
சொல்லினுமி ருக்கின்றான் தூயனிதைச் சோதித்
தில்லுமென்றான் சேய்நன் னெறி (27)

(இரணியன் செயலும் பகவான்செயலும்.)

நல்லதெனப் பொன்னன் நகைத்துத்தூ ணைப்புடைத்தான்
வல்லநர சிங்கமென வந்துநகைத்—தெல்லையிலான்
மாலைநே ரத்தவனை வைத்துமடி மேற்கொன்றான்
வேலைநேர் வாணகத்தால் வென்று. (28)

(கவிக்கூற்று)

போய்விட்ட தென்றிடுக்கண் பொன்னுலகு மண்ணுலகும்
வாய்விட் டாற்றியின்ப வாரிதியிற்—றோய்விட்ட
சிந்தையராய் வாழ்த்திச் செழும்பூ மழைபொழிந்து
இந்திரையைச் சேர்த்திறைஞ்சி னார். (29)

பகவா னொருவனுளன் பாரென்ற சேயைப்
பகவான் பரிந்துதழீப் பால—இகலினியுன்
தொல்குலமீ தில்லையெனச் சூட்டினான் பொன்மகுடம்
பல்குலமுங் கொண்டாடப் பார்த்து. (30)

பிரகலா தன்வாழி பேணியவன் சீரை
யுரகபூ பன்றாங் குலகில்—விரவவைப்போர்
வாழியிம் மைப்பேறும் வான்மறுமைப் பேறுநனி
சூழவிசை யோடு திலங்கி.

(முற்றும்)

ம. இராஜகோபால பிள்ளை.

கடமை கடைப்பிடி

அல்லது

ஸுத்யும்நமகாராஜன்

பாரதப்போர் முடிவானதும் பாண்டவர் தலைவரான தருமருக்குப் பட்டாபிஷேகஞ் செய்ய ஏற்பாடாயிற்று. ஆனால் தருமபூபதி அதற்கு உடன்படாமல் மனோவியா குலங் கொண்டிருந்தார்; தம்பிமார் முதலானவர்கள் என்ன சொல்லியுங் கேட்கவில்லை. அப்போது,

வியாசர் "தருமரே! நிதானியும், சகல விவகாரங்களும் அவரவர் பூர்வத்திற் செய்த வினையின்பயனே அல்லது வேறன்று. உமது தாயாதிகள் உமக்கும் உம்முடைய தம்பிமார்களுக்குந் தேடிய சதியாலோசனையை மறந்தீர் போலும். திரௌபதையை அவர்கள் படுத்தினபாடு நீர் அறியீரா? இதுவிஷயமாக நீங்கள் செய்துகொண்ட பிரதிக்கினையின்படி உங்கள் கடமையைச் செய்து முடித்தீர்கள் இது க்ஷத்திரியருக் குரிய தருமம். இவ்வளவு கஷ்டப்பட்டு அடைந்த இராஜ்ஜியத்தை இப்போது நீர் வேண்டாமென்று சொல்வது உங்கள் குலதருமத்திற்குப் பழுது தேடியதாகும். இதன் பொருட்டுப் பிரயாசை எடுத்துக்கொண்ட உமது தம்பிமார்கள் ஆயாசப் படுகிறார்கள். நான் சொல்வதைக் கவனமாய்க் கேளும். உலகத்தில் இல்வாழ்க்கையே மேம்பாடுடையது. மற்ற வர்ணாச்ரமங்கள் இதற்கு நிகராகமாட்டா. இராஜனயிருந்து மனைவிடம் பூண்டு

தன்னிடம் வரும் வழக்குகளைத் தீரவிசாரித்துக் குற்ற முள்ளோரைத் தண்டித்தல் வேண்டும். தண்டனையைப் பக்ஷபாதமில்லாமல் விதித்து ஒழுங்காக யாவற்றையும் பாதுகாக்கவேண்டும். இவ்வாறு நடந்துவரும் அரச னுக்குச் சகல சுகங்களும் கைகூடுவதோடு முடிவில் அவன் மோக்ஷ சாம்ராஜ்யத்தையடைகிறான். இந்த இராஜ்யத்தின் பொருட்டல்லவா நீங்கள் யுத்தத்தில் தலையிட்டது. திடீரென்று உமக்கு இதில் வெறுப் பேனுண்டாக வேண்டும்? இது கோழைத்தனமல்லவா? ஒரு சிறுகதை சொல்லுகிறேன் கேளும்.

பூர்வத்தில் சங்கர் என்றும் லிகிதர் என்றும் இரண்டு சகோதரர் இருந்தனர். இவ்விருவர்க்கும் வேறு வேறு ஆச்ரமங்களுண்டு. அவ்வாச்ரமங்களில் மிக்க மதுரமான கனிகளைக்கொடுக்கும் மரங்களிருந்தன. ஒருநாள் லிகி தர், சங்கர் ஆச்ரமத்திலில்லாதபோது அவ்விடஞ் சென்று அங்கிருந்த மரங்களிலிருந்த கனிகளைப் பறித் துப் புசித்தனர். இதையறிந்த சங்கர், லிகிதரைப் பார்த்து "நீ எமது அனுமதியின்றி எமக்குரிய பழங் களைக் களவாடியதால் திருடனானாய். ஆதலால் இக் குற்றத்தினின்றும் நீங்கிப் புனிதனாவதற்கு உடனே ஸுத்யும்நராஜனிடம் போய்த் தண்டனையடைந்துவா" என்று கட்டளையிட்டார்.

புத்திமானகையால் லிகிதர் அவ்வாறே அரசனிடஞ் சென்று உண்மையைக் கூறினர். அரசன் "நீர் மெய் யைச் சொன்னபடியால் உம்மை மன்னித்துவிட்டோம். போகலாம்" என்றான். லிகிதர் அதையங்கீகரித்துக் கொள்ளவில்லை. தண்டித்தே தீரவேண்டும் என்று

வாதாடினார். அதன்மேல் அரசன் அவருடைய கைகளை வெட்டி விட்டான். வெட்டுண்ட கையுடன் லிகிதர் சங்கரிடம் வந்து "உமது கட்டளைப்படி தண்டனை யடைந்தேன். இனி மன்னிக்கவேண்டும்" என்றார்.

சங்கர் அவரை அருகிலுள்ள "'பாகுதா' நதிக்குப் போய் நீராடி தர்ப்பணாதிகள் செய்து செய்த பாவத்தை மறந்துவிடு" என்றார். அவ்வண்ணமே செய்யக் கைகள் முன்போல் முளைத்துவிட்டன. இது கண்ட லிகிதர் அதிவியப்புடன் சங்கரிடம் வந்தார். அவர் "அப்பா! நான் உன்னைத் தண்டிக்க ஏற்பட்டவனன்று. அரசன் இக்காரியத்தைச் செய்து புனிதனானான். நீயும் தப்பை ஒப்புக்கொண்டு தண்டனையடைந்து புனிதனானாய். அதனால் வெட்டுண்டகைகள் முளைத்தன" என்றார்.

பார்த்தீரா தருமரே! இப்படி மனோதிடத்துடன் நீதிசெலுத்துவதே க்ஷத்திரியன் கடமை. ஆதலால் நீர் இந்த நியாயமான யுத்தத்திற்காக மனம் வருந்துவது சரியல்ல. அரசு இல்லாத தேசம்பாழ். அங்கு தர்மங்கள் நிலைபெறா. ஹயக்ரீவன் என்ற அரசன் முற்காலத்தில் உம்மைப்போலவே சுற்றத்தாரைக் கொலைசெய்ய நேர்ந்தது. அவன் தன்கடமையாக அதைச்செய்துபுகழடைந்து முடிவில் மோக்ஷமுற்றான். நீரும் அவ்விதமே மோக்ஷமடைவீர். தடைசெய்யாமல் இராஜ்யபாரத்தை ஏற்றுக் கொள்ளும். அவரவர்கடமையை அவரவர்செய்தாற்றான் இம்மைப் பேறும் மறுமைப்பேறும் அடையலாம்" என்றனர்.

தருமரும் ஒப்புக்கொண்டு சுகமடைந்தார்.

இதனால் ஒவ்வொருவரும் செய்யவேண்டியகடமையைச் செய்தேதீரவேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டோம்.

கெடுவான் கேடுநினைப்பான்.

ஒரு ஆற்றங்கரை ஓரமாகத் தப்பிவந்த சுண்டெலி யொன்று அவ்வாற்றைக் கடக்க யோசித்துக்கொண்டிருக்கையில் அவ்வாற்றில் வெகுநாளாய் வாழ்ந்துகொண்டிருந்த அதி தந்திரந்தேர்ந்த வயோதிகத்தவளையொன்று, இச்சுண்டெலியைப் பார்த்து, "ஓ! எலியே! நீ இவ்வாற்றைக் கடக்கவெண்ணி அதிக யோசனை செய்துகொண்டிருப்பதா யெண்ணுகின்றேன். அது வாஸ்தவமாயின் உன்னை என் முதுகிலேற்றிக்கொண்டு இவ்வாற்றைக் கடத்திவிடுகின்றேன்; என்னை நீ நம்பு" என்று உறுதியாகக் கூறியது. அம்மண்டுகத்தின் வார்த்தையை மலையிலக்காக நம்பிய அவ்வெலி உடனே சந்தோஷித்து அவ்வாறே ஒத்துக்கொண்டது. அப்போது அம்மண்டூகம் அவ்வெலிக்கு ஓர் கயிற்றைக்கட்டி அக்கயிற்றின் நுனியைத் தன் காலிற்கட்டிக்கொண்டு எலியைத் தன்முதுகிலேறச்செய்து தண்ணீரில் சரேலென்று குதித்து நட்டாற்றில் விட்டுவிடவேண்டுமென்னும் கெட்ட எண்ணத்துடனே நடு ஆறுவரையிற் போய்த்தான் தண்ணீரில் மூழ்கி நீந்தத்தொடங்கியது. அப்போது சுண்டெலி மண்டூகத்தைப்பார்த்து, "ஐயா! மண்டூகராஜனே! என்னை முழுகச்செய்வதில் உனக்கென்ன லாபம்?" என்றது. அதற்குத் தவளை ஓ ஏமாந்த பயித்தியங்கொண்ட எலியே! மண்டூகத்தலைவனாகிய நானோ உன்னை முதுகிற்சுமந்துகொண்டு ஆற்றைக் கடத்தி விடுவேன். நான் எனக்கிஷ்டமானபடி செல்லுவேன். நீ தப்பித்துக்கொள்ளும் வழியைத் தேடிக்கொள்" என்று சொல்லிக்கொண்டே தண்ணீரில் முழுகிவிட்டது. இவ்விதமாய்த்தண்ணீருக்குள் அமிழ்ந்து தவித்துக்கொண்டிருந்த எலியை ஆகாயத்தில் வட்ட

மிட்டுப் பார்த்திருந்த ஓர் நாரை உடனே பறந்துவந்து. அதைத்தன் மூக்கிற் கௌவிக்கொண்டுபோய்த் தன் கூட்டில் வைத்தது. அவ்வெலியுடன் தவளையும் அந்தக் கூட்டில்வந்து சேர்ந்தது. அத்தருணத்தில் நாரை தவளையைப் பார்த்து "ஓமண்டூகமே, உன்னை இவ்விடத்திற் கொண்டுவந்ததார்?" என்றுகேட்டது. அதற்குத் தவளை மிகவும் நாணத்துடனே "சுண்டெலியை மோசஞ்செய்ய எத்தனித்த எனது பொல்லா வஞ்சகமே என்னை இங்கு கொண்டுவந்துவிட மோசம்போனேன்" என்றது. அதனைக்கேட்ட நாரை உடனே தவளையைக் கவளீகரித்தது. இதனால் "கெடுவான் கேடுநினைப்பான்" என்னும் பழமொழி அனுபவமாதலைக் காண்க.

ஜனவ்நோதினி.

பழமொழிகள்.

1. இளமையிற் கல்வி எப்போதும் நிற்கும்
2. இளமையிற் சோம்பல் முதுமையில் மிடிமை
3. இளமையிற் பழக்கம் எப்போது மறவாது

4, இறைத்தகிணறு ஊறும், இறையாத கிணறு நாறும். இதனால் உழைத்தவன் பயனடைந்து பிறர் பெருமைப்படுத்திப் பேச விளங்குவான் என்பதும் சோம்பேறி பிறர் இழிவுப் படுத்திப்பேச இழிவடைவான் என்பதும் விளங்குவது காண்க.

5. இல்லாதவன் பொல்லாதவன்—என்னும் இந்தப் பழமொழியை ஒருவரும் மறக்கக்கூடாது. மறந்தால் சோம்பல் என்கிற பகைதோன்றும். சோம்பல்மேல் கிளம்பிச் சூழ்ந்துகொள்ளுமானால் "சோம்பரேன்பவர் தேம்பித் திரிவர்" என்னும் முதியோர் திருவாக்கிற் கிலக்காக நேரிடும்.

திருக்குறள்.

8-ஆம் அதிகாரம்—அன்புடைமை.

1. அன்பிற்கு முண்டோ அடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

(1) தம்மால் அன்பு செய்யப்பட்டவருடைய துன்பங் கண்டபோதே அன்புடையார் கண்ணிலே பெருகுகின்ற நீரே அந்த அன்பைக் காட்டும்.

2. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.

(2) அன்பில்லாதவர் எல்லாப் பொருளாலும் தமக்கே உரியவர்; அன்புடையவர் பிறருக்கு எலும்பையும் கொடுக்க உரியவராவர்.

3. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

(3) மக்களுயிர்க்கு உடம்போடு உண்டாகிய சம்பந்தத்தை, அன்போடு பொருந்துவதற்காக வந்த வழியின் பயனென்று கூறுவர்.

4. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

4) அன்பு ஒருவர்க்கு, ஆசையையும் நட்பையும் கொடுக்கும்.

5. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

(5) மண்ணுலகில் இல்வாழ்க்கையிலே பொருந்திய அன்பின்பயனை விண்ணுலகிலடையும் பேரின்பமென்று சொல்வர்.

6. அறத்திற்கே அன்புசார்பென்ப வறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

(6) அன்பானது தருமத்திற்கே துணையென்று சொல்லுவர் அறியாதார். பாவத்தை நீக்குவதற்கும் அந்த அறமே துணையாம்.

7. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.

(7) என்பில்லாப் புழுக்களைச் சூரியன் சுடுவது போல் அன்பில்லாத உயிர்களைத் தருமதேவதை சுடும்.

8. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

(8) மனத்திலே அன்பில்லாதவர் இல்வாழ்க்கையிலிருந்து வாழ்வது கடினநிலத்திலே உலர்ந்த மரமானது தளிர்ப்பது போலாம்.

9. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

(9) உள்ளன்பில்லாதவர்க்குப் பிறவுறுப்புக்களிருந்தும் பயனில்லை.

10. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு.

(10) அன்புடன் கூடிய உடம்பே உயிருள்ள உடம்பு. அந்த அன்பில்லாத உடம்பே உயிரில்லாத உடம்பு.

[stamp] 186466

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருடசந்தா தபாற்கூலி யுட்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரு.	1	8	0
	பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ...	ரு.	2	0	0
தனிச் சஞ்சிகை .. ... விலை		ரு.	0	2	6

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக் கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். பாதி வருஷத்திலிருந்து சேர்த்துக் கொள்ளப் படமாட்டாது. ஒரு வருஷத்திற்குக்குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதி யனுப்பவேண்டும்.

3. சந்தாத் தொகையை முன்னுடிசெலுத்தியாவது அல்லது வி.பி.யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதால் அணா மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால்சந்தாத்தொகையைமணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்

6. இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு	ஒரு மாதத்திற்கு ...	ரூபா.	5—0—0
அரைப் பக்கத்திற்கு	" ...	"	3—0—0

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

பாலவிநோதினியின் ஆசிரியராகிய

பிரஹ்மஸ்ரீ வரகவி. திரு. அ. சுப்ரமண்யபாரதி

யவர்களியற்றிய நூல்கள்.

ஸ்ரீமத்பாகவதம் :—4-வாலியம்	ரூ. 22	0
ஆநந்தராமாயண வசனம்	6	0
ராமாயண ரகசியம்	0	10
ஜடாவல்லவர் பெரிய பதிப்பு (3rd Edn.	2	8
விஜயபாஸ்கரன்	2	0
கதாசரித் சாகரம்	1	4
௸ 2-ம் பாகம்	1	4
பாரதசாரம்	1	4
வள்ளிநாயகி	0	12
மாருதிவிஜயம்	0	12
கோதண்ட விஜயம்	0	12
வஜ்ரவேல்கை	1	4
சரித்திர சந்திரிகை	0	12
ஔவை அருந்தமிழ்	0	12
அரிச்சந்திரன்	0	10
வனஜாக்ஷி	0	10
ஆஸ்திகமத உபாக்யானம்	0	10
மாளவிகாக்னிமித்திரம்	0	10
பாண்டவர்களின் பால லீலை	0	10
பாண்டவர் வனவாசம்	0	12

	ரூ.	
பாண்டவ விஜயம்	1	0
ஜெய லக்ஷ்மி	0	10
பாரதன் நாடகம்	0	12
பாரதன் வசனம்	0	8
கீர்த்தி சிங்கன்	0	8
ஸ்நேகலதா	0	8
ஸ்ரீ விஷ்ணுலீலை	0	5
ஸாவித்திரி	0	6
கஜேந்திரமோக்ஷம் கண்ணப்பன்	0	4
ருக்மாங்கதன்	0	4
மதாலஸா	0	4
பத்மினி	0	3
பிதுர்வாக்யபரிபாலனம்	0	4
பால கோபால லீலை	0	4
ஸ்ரீராமச் சந்திரன்	0	3
பரசுராமர்	0	3
ஹைமவதி	0	3
தங்கக்கொடி	0	3
சந்திரகாசன்	0	3
உத்தரன் அணா	0	$3\frac{1}{2}$
துருவன்	0	3
விபீஷணன்	0	2
மார்க்கண்டேயர்	0	3

N. B.: பாலவிநோதினி சந்தாதாரர்களுக்குமாத்திரம் எந்தப் புத்தகம் வாங்கினாலும் ரூபாவுக்கு ஒரு அணா வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST. MADRAS.